மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 248. திரு. ஏ. டி. செல்லசாமி. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

248—

ஐ.ஆர்.டி.பி. திட்டத்திற்கு மாற்றுத் திட்டம்.

* 9859— திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் கடன் திட்டமான ஐ.ஆர்.டி.பி. வழங்குவதில் வருமான உச்ச வரம்பை மாற்றவும், காலதாமதத்தைத் தவிர்க்கவும், மாற்றுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

1992-93 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடும்பத்தின் ஆண்டு நிகர வருமானம் ரூ. 11,000 வரை உள்ளவர்களுக்கு கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மான்யம் துரிதமாக வழங்குவதற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் பரிட்சார்த்தமான கீழ்க்கண்டுள்ள வட்டாரங்களில் மட்டும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

1. குடும்பக் கடன் திட்டம் : (Family Credit Plan)

1. பெரியார் மாவட்டம்: ஈரோடு, கோபி மற்றும் அந்தியூர் ஊராட்சி ஒன்றியங்கள்.

2. தஞ்சாவூர் மாவட்டம்: தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியங்கள்.

3. நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம்: திருத்துறைப்பூண்டி மற்றும் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியங்கள்.

1993 ஏப்ரல் 6]

2. நேர்முக பணம் பட்டுவாடா திட்டம் : (Cash Disbursement Scheme)

ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 சதவீதம் வட்டாரங்களில் அமுல் செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பரிட்சார்த்தமாக மேற்படி திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுவதை ஆராய்ந்த பின்னர் மேற்படி திட்டங்களை அனைத்து வட்டாரங்களிலும் அமுலாக்கம் செய்வதற்கு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்/ மான்யம் வழங்குவதில் வங்கிகளில் காலதாமதம் ஏற் படுவதை தவிர்க்கும்பொருட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்கள் கூட்டத்தினை நடத்தி ஊரக வளர்ச்சி இயக்குநரும், அரசு செயலர் அவர்களும் அறிவுரை வழங்குகின்றனர். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலை வரும் முதன்மை வங்கி அலுவலரும், திட்ட அலுவலரும் மாதந்தோறும் அரசு அலுவலர்கள் மற்றும் வங்கி அதிகாரி கள் கூட்டம் நடத்தி திட்டப்பணி விரைவாக செயல்படுவதற்கும் கடன் வழங்குவதில் காலதாமதம் தவிர்ப்பதற்கும் அறிவுரைகள் வழங்குகின்றனர்.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களுக்கு கடன் உதவி வழங்குவதில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1992-93 ஆம் ஆண்டு முதல் 11,000 வரை உள்ளவர்களுக்கு கடன் வழங்குவதாகக் கூறியுள்ளார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாதம் 1,500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு அந்த ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுத் தால் அவர்களுக்கும் உதவியாக இருக்கும். ஏழை எளிய மக்களுக்கு அதுபோன்று கடன்கள் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். இதை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிகர ஆண்டு குடும்ப வருமானம் 6,400 ரூபாய் உள்ளவர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது. இதை உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்து இப்போது 11,000 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறோம். இதற்கு மேல் உயர்த்துவதற்கு அரசின் பரிசீலனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. போன்ற கடன்கள் வழங்குவதில் பொதுத்துறை வங்கிகளுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. ஆனால் இப்பொழுது கடன் வழங்குவதற்கு கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. பிரிலிமினரியாக அந்த பயனாளிகளைத் தேர்ந்தெடுத்த பிறகும் 8 அல்லது 9 மாதங்கள் பொதுத்துறை வங்கிகள் கடன் உண்டா இல்லையா என்பதைத் தெரிவிக்காமலேயே காலம் கடத்துகிறார்கள். இதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போன்றவர்களிடம் முறையிட்டால் வங்கிகளை எங்களால் கட்டுப்படுத்த இயலாது என்று சொல்கிறார்கள். இப்படி அதிக காலதாமதம் ஆவதால் தரகர்கள் போன்றவர்கள் எல்லாம் வந்து தலையிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் நேர்முகத் தேர்வில் இந்த வங்கி அலுவலர்கள் இருந்த போதும் கூட பிரிலிமினரியாக செலக்ஷன் செய்த பிறகு, பின்னால் அவர்கள் ஜாமீன் செக்யூரிட்டி வேண்டும் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஒரு தடவை செக்யூரிட்டி கொடுத்தாலும், அடுத்த தடவை அதைவிட அதிகமாக செக்யூரிட்டி கேட்கிறார்கள். அசையாத சொத்துக்களுக்குப் பத்திரம் கொண்டு வாருங்கள் என்று கேட்கிறார்கள். ஏழை எளியவர்களுக்குத்தான் நாம் ஐ.ஆர்.டி.பி. லோன் வழங்குகின்றோம். அவர்களிடம் போய் சொத்து ஜாமீன் கேட்பது என்பது முரண்பாடான ஒரு கருத்தாக இருக்கிறது. ஆகவே, பொதுத்துறை வங்கிகள் ஒத்துழைக்காத வரை இந்தத் திட்டத்தை நாம் ஏழை எளிய மக்களுக்கு பயன் படும்படியாகச் செய்ய முடியாது. ஆகவே மத்திய அரசிடம் கலந்து, வங்கியும் இதிலே ஒத்துழைப்பு கொடுத்து முதல் கட்டமாக பயனாளிகளுக்கு — தேர்ந்தெடுத்த பயனாளிகளுக்கு நிச்சயமாக கடன் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியம் வழங்குவதிலே வங்கிகள் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்கள் கூட்டத்தினை நடத்தி ஊரக வளர்ச்சி இயக்குநரும், அரசு செயலாளர் அவர்களும் அறிவுரை வழங்குகின்றனர். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரும் முதன்மை வங்கி அலுவலர், திட்ட அலுவலர், அரசு அலுவலர்கள் மற்றும் வங்கி அதிகாரிகள் கூட்டத்தை மாதம் ஒருமுறை நடத்தி திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்கும், கடன் வழங்குவதில் காலதாமதத்தை தவிர்ப்பதற்கும் அறிவுரை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.